Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.1 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ராமலிங்கம் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2026.

(A1 and A2 present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது தண்ணீர்பந்தல், பெரியசோழிபாளையம் அஞ்சல் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவம் 16.09.2024ம் தேதி இரவு 9 மணிக்கு தண்ணீர்பந்தல் அம்மன் லேத் பட்டறை அருகில் நடந்தது. சம்பவம் நடந்தபோது நான் எனது வீட்டில் இருந்தேன். எனது பங்காளி பையன் நடராஜன் எனக்கு போன் செய்து என் அண்ணன் மகன் மனோஜிற்கும் அவரது மனைவி பிரியாவிற்கும் சண்டை கட்டி சத்தம் போட்டு கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி என்னை கூப்பிட்டார். அதன்படி நான் இரவு 9.30 மணிக்கு நடராஜன் உடன் சம்பவம் நடந்த இடத்திற்கு போனேன். நாங்கள் போன போது மனோஜும் பிரியாவும் ஒருவருக்கொருவர் சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள். மனோஜின் அம்மா மணிமேகலையும், சக்திவேல், ரைஸ் மில் செந்தில், அய்யம்பெருமாள், ஆகியோர்களும் அங்கு இருந்தார்கள். எதற்காக இங்குவந்து சத்தம் போட்டு கொண்டிருக்கிறீர்கள் என்று நான் மனோஜிடம் கேட்டேன். வீட்டிலிலேயே சண்டை கட்டிவிட்டு பிரியா கோவித்து கொண்டு தண்ணீர்பந்தல் வந்துவிட்டார் என்றும், மனோஜும்

அவரது அம்மாவும் அவரது பின்னாலேயே வந்ததாக சொன்னார்கள். மனோஜ் பிரியாவிடம் சமாதானம் பேசி கொண்டிருந்தார். நானும் இரவு நேரத்தில் சத்தம் போட வேண்டாம் எதுவாக இருந்தாலும் காலையில் பேசி கொள்ளலாம் என்று சொன்னேன். அங்கிருந்த அனைவருமே இருவரையும் சமாதானப்படுத்தி கொண்டிருந்தோம். அப்போது 1வது எதிரி பிரியாவின் அண்ணன் சுந்தரராஜன், அவரது அப்பா பொன்னுசாமி மற்றும் அவரது உறவினரான 2ம் எதிரி சக்திவேல் ஆகிய மூவரும் வெள்ளை கலர் மாருதி ஆல்டோ கார் பதிவு எண் TN 10 S 7062 ல் அங்கு வந்தார்கள். காரிலிருந்து இறங்கியவுடன் எதிரி சுந்தரராஜன் யாரிடமும் எதுவும் கேட்காமல் ஓடி சென்று மனோஜ் நெஞ்சில் கையால் குத்தினார். உடனே மனோஜ் கீழே விழுந்துவிட்டார். உடன் வந்த சக்திவேலும் மனோஜை கையாலும், காலாலும் அடித்து உதைத்தார். சுந்தரராஜ் மனோஜை பார்த்து **"தேவுடியா பயலே உனக்கு இதே வேலையா போச்சு நீ உயிருடன் இருக்கும்வரை என் தங்கச்சிக்கு விடிவு காலம் பிறக்காது"** என்று சொல்லி மனோஜை கீழே தள்ளிவிட்டு காலால் நெஞ்சில் உதைத்தார். மனோஜின் அம்மா மணிமேகலை அடிப்பதை தடுத்தார். சக்திவேல் மனோஜின் அம்மாவை கன்னத்தில் ஓங்கி அறைந்தார். நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களை பிடிக்கபோன போது லேத் பட்டறையில் கிடந்த இரும்பு கம்பியை எடுத்து கிட்ட வந்தால் உங்களையும் அடித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள். பின்பு, அவர்கள் வந்த காரில் திரும்ப சென்றுவிட்டார்கள். மனோஜ் மயக்கமாகி கிடந்தார். அவரை வக்கீல் சரவணக்குமார் காரில் ஜேடர்பாளையம் சிவசண்முகம் ஆஸ்பத்திரிக்கு கூட்டி சென்று காட்டினோம். டாக்டர் அவரை பரிசோத்துவிட்டு நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொன்னார். நாங்கள் அதே காரில் நாமக்கல் எம்.எம் மருத்துவமனைக்கு கூட்டி போனோம். அங்கு டாக்டர் மனோஜை பார்த்துவிட்டு நாமக்கல் GH-க்கு போக சொன்னார். அங்கிருந்து தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மனோஜை நாமக்கல் GH-க்கு கூட்டி போனோம். அங்கிருந்த டாக்டர் பரிசோதித்து பார்த்துவிட்டு வரும்வழியிலேயே

மனோஜ் இறந்துவிட்டதாக சொன்னார். அவரது உடலை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தார்கள். மறுநாள் காலை 10 மணிக்குமேல் பிரேத பரிசோதனை நடந்தது. அன்று பிரேதவிசாரணையை ஆய்வாளர் பஞ்சாயத்தார் முன்னிலையில் மேற்கொண்டார். அந்த விசாரணையில் நானும் கலந்து கொண்டேன். அதன்பிறகு, இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னை விசாரித்தபோது சார்பு ஆய்வாளர் கதிஜா பேகம் என்பவர் வீடியோ பதிவு செய்தார். எதிரிகள் வந்த காரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். பிறகு, இது சம்பந்தமாக பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் நான் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் காரில் தான் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அந்த காரின் போட்டோக்கள் மற்றும் Pendrive முறையே அ.சா.ஆ.1 (3 போட்டோக்கள்) மற்றும் அ.சா.ஆ.2 ஆகும்.

**(இந்நிலையில் இந்த சாட்சியின் 183 (5) BNSS ன் படியான வாக்குமூலம் வழக்கு கோப்பில் இல்லை என்பதால் அதை வரவழைப்பதற்காக முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.2 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சக்திவேல் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2026.
(A1 and A2 present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது தண்ணீர்பந்தல் பெரியசோழிபாளையம் அஞ்சல் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும். இறந்துபோன மனோஜ் மற்றும் அவரது மனைவி பிரியாவை எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு பங்காளிகள். சம்பவம் 16.09.2024ம் தேதி இரவு 9.30 மணிக்கு அம்மன் லேத் பட்டறை அருகே நடந்தது. சம்பவம் நடந்த போது நான் வீட்டில் இருந்தேன். பைக் எடுத்து கொண்டு கடைக்கு வந்தபோது, அம்மன் லேத் பட்டறை அருகே மனோஜும் அவரது மனைவியும் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் போய் சத்தம் போட வேண்டாம் என்று சமாதானப்படுத்தினேன். அப்போது அங்கு ரைஸ்மில் செந்தில், அய்யம்பெருமாள், நடராஜன், மனோஜின் அம்மா மணிமேகலை மற்றும் பலர் இருந்தார்கள். சாட்சி சொன்ன ராமலிங்கமும் இருந்தார். மனோஜ் அவரது மனைவியும் அடிதடி சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். எல்லோரும் சேர்ந்து அவர்களை விலக்கிவிட்டு பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பிரியாவின் அண்ணன் சுந்தரராஜ், அவரது அப்பா பொன்னுசாமியும் மற்றும் அவரது உறவினர் சக்திவேல்

ஆகியோர் மாருதி ஆல்டோ காரில் அங்கு வந்தார்கள். காரிலிருந்த இறங்கியவுடன் சுந்தரராஜன் ஓடி சென்று சுந்தரராஜன் மனோஜை கீழே தள்ளி எட்டி உதைத்தார். தகாத வார்த்தைகளால் திட்டினார். உடன் வந்த சக்திவேலும் சேர்ந்து மனோஜை கையால் நெஞ்சில் தாக்கினார். மனோஜின் அம்மா தடுத்த போது அவரையும் சக்திவேல் கன்னத்தில் அறைத்து விட்டார். நாங்கள் போய் எதிரிகளை ஏன்டா அடிச்சிங்க என்று கேட்டதற்கு அருகில் வந்தால் இரும்பு கம்பியை எடுத்து சுந்தரராஜன் உங்களையும் அடித்து கொன்றுவிடுவேன் என்று சொல்லி மிரட்டினார். பக்கத்தில் இருந்தவர்களையும் சண்டையை தடுத்தவுடன் காரில் வந்த மூவரும் மீண்டும் காரில் ஏறி கபிலர்மலை நோக்கி போய்விட்டார்கள். மனோஜ் கீழே விழுந்துகிடந்தார். அவரை தூக்கி கொண்டு ஜேடர்பாளையம் சிவசண்முகம் ஆஸ்பத்திரிக்கு வக்கீல் சரவணக்குமார் காரில் போனோம். அங்கு மனோஜை பார்த்துவிட்டு நாமக்கல் GH க்கு கூட்டி போக சொன்னார்கள். பின்பு, நாமக்கல் எம்.எம் ஆஸ்பத்திரிக்கு கூட்டிபோனோம். அங்கிருந்த டாக்டர் பார்த்துவீட்டு நாமக்கல் GH க்கு கூட்டி போக சொன்னதால் நாங்கள் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மனோஜை நாமக்கல் GH க்கு கொண்டு போனோம். அங்கிருந்த டாக்டர் மனோஜை பரிசோதித்து விட்டு வரும்வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார். இறந்தவர் உடலை சவக்கிடங்கிற்கு அனுப்பினார்கள். மறுநாள் காலையில் பிரேத பரிசோதனை மற்றும் பிரேத விசாரணை நடந்தது. இது சம்பந்தமாக அன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

ஆய்வாளர் விசாரிக்க சார்பு ஆய்வாளர் எனது விசாரணையை செல்போனில் வீடியோ பதிவு செய்தார். அதன்பிறகு நான் பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன்.

**(இந்நிலையில் இந்த சாட்சியின் 183 (5) BNSS ன் படியான வாக்குமூலம் வழக்கு கோப்பில் இல்லை என்பதால் அதை வரவழைப்பதற்காக முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.